*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume IX (2)**
**Mav - 2025**

# வைரமுத்துவின் கவிதைகளில் மனித உரிமைச்சிந்தனைகள்

மலர்விழி பா,
இணைப்பேராசிரியை, வரலாற்றுத்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author's mail id: malarvizhip@vvvcollege.org**

**ஆய்வுச்சுருக்கம்**

வற்றாத இலக்கியச் செல்வங்களின் கருவூலமாக விளங்குவது தமிழ். அதன் கொள்ளுப்பேத்தியாக விளங்குவதுதான் புதுக்கவிதை. ஒரு விதத்தில் புதுக்கவிதையே மனித உரிமையின் வெளிப்பாடுதான். ஆம்! இது எழுத்துரிமையின் வெளிப்பாடு, இலக்கணச் சிறைக்குள் உணர்வுகளை வெளியிடமுடியாமல் தவித்த கவிஞனின் உரிமைக்குப் பிறந்த பெண் என்று புதுக்கவிதையை வர்ணிப்பார் வைரமுத்து அவர்கள். நாட்டில் மனிதன் மட்டும் உரிமைகள் பறிக்கப்பட்டு சுதந்திரத்திற்காக அலையவில்லை. சொற்களும் யாப்பிற்குக் கட்டுப்பட்டுச் சுதந்திரமில்லாமல் தவித்த காலம் ஒன்று உண்டு. அந்த இருண்ட காலத்தைப் பொற்காலமாக மாற்றியவர் மகாகவி பாரதி. பாரதி நாட்டு விடுதலைக்காகவும் பெண் விடுதலைக்காகவும் மட்டும் பாடவில்லை, சொல் விடுதலைக்காகவும் பாடினான். கனவுக்கு எட்டாத கற்பனைகளைச் சுவாசித்துக் கொண்டிருந்த நாம் இன்று அவனால் தான் உண்மைகளையும் உரிமைகளையும் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம்.

பாரதி வித்திட்டதால்தான் இன்றைய புதுக்கவிதைகளில் உணர்வுகளும் உரிமைகளும் அதிகம் பேசப்படுகின்றன. அதிலும் கவிஞர் வைரமுத்து சேரிக் குழந்தைகளின் அம்மணத்தைக் கண்டு உள்ளம் வெதும்பிப் பாடியவர். அவர் கவிதைகளில் இடம் பெற்றுள்ள மனித உரிமைகள், அவ்வுரிமைகள் மனிதனுக்கு கிடைக்கின்ற நிலைகள் மற்றும் அவற்றை மனிதன் பயன்படுத்தும் முறைகள் குறித்தும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

**குறிப்புச்சொற்கள் : பெண்ணியம், எழுத்துரிமை, மொழி உரிமை, பசுமை சூழல் பாதுகாப்பு, பேச்சுரிமை, பெண்ணுரிமை.**

## ஆய்வின் நோக்கம்

இத்தரணியில் மனிதன் என்ற உயிர் பிறக்கும்போதே சில அடிப்படை உரிமைகளுடன் பிறக்கிறான். இவைத் தான் மனித உரிமைகள். இவ்வுரிமைகள் அனைத்தும் நாடுகளின் அரசியலமைப்பிலும், ஐக்கிய நாடுகள் சபையின் அறிவிப்புகளிலும் குறிப்பிடப்பட்டாலும், அவை மக்கள் மனங்களில் வேரூன்ற வேண்டியது கலை வழியே தான் சாத்தியமாகிறது. அதில் கவிதை ஒரு ஆழமான சக்தி வாய்ந்த வடிவம்.

தமிழ்க்கவிதை உலகில் தனித்துவமான குரலாகத் திகழும் வைரமுத்து, தனது கவிதைகளில் மனித உரிமைகளை மையமாகக் கொண்டு எச்சரிக்கையும், விழிப்புணர்வும், உணர்வும் உருவாக்கி வந்தவர். பெண் உரிமை, தொழிலாளர் உரிமை, சமூக நீதி, பசுமை சூழல் பாதுகாப்பு, மொழி உரிமை, வறுமை ஒழிப்பு போன்ற பல மனித உரிமைச் சிந்தனைகள், அவர் கவிதைகளில் இடம் பெற்றுள்ளன. அங்கனம் அவர் தம் கவிதைகளில் இடம் பெற்றுள்ள உரிமைகளை இனங் காட்டி வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## மனித உரிமைகள் விளக்கம்

மனிதன் இயல்பான சுதந்திரத்தோடு வாழவும், தான் இசைந்து வாழும் சமுதாயத்திற்கான கடமைகளை முழுமையாக ஆற்றவும் முயலும் வேளைகளில் அவன் சமுதாயத்தின் மேல் எழுப்பும் கேட்புகளே தனி மனித உரிமைகளாகும்[1]. இந்த உரிமை வேட்கை மனிதனோடு இணைந்தே பிறந்திருக்க வேண்டும். மனிதன் தோன்றிய காலந்தொட்டே தன் சமுதாயத்திற்கும் தனக்கும் சில பொதுவான அடிப்படை உரிமைகள் இயற்கையாகவே உரித்தானவை என்ற கருத்தோடு தான் அவன் வாழ்ந்து வருகிறான். இன்று உரிமைச் சட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தாலும் அவன் படிப்படியாக நாகரிக முன்னேற்றம் அடைந்து வளர்ந்த காலங்களில் உரிமைச் சட்டங்கள் வரையறுக்கப்படவில்லை, இருப்பினும் உரிமைகள் மறுக்கப்பட்டாலோ அல்லது அளிக்கப்பட்டு வந்த உரிமைகள் தடைப்பட்டலோ மனித சமுதாயம் பொறுத்துக்கொண்டு இருப்பதில்லை என்பதை ஆகஸ்ட் புரட்சி, பிரஞ்சுப் புரட்சி போன்ற வரலாற்று நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன. தற்போது உரிமைகள் வரையறுக்கப்பட்டுவிட்டன. மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10 அன்று கொண்டாடப்படுகிறது. இந்நிலையில் மனித உரிமைகள், 1. அடிப்படை உரிமைகள், 2. பொது உரிமைகள் என்று இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன[2].

## அடிப்படை உரிமைகள்

எழுத்துரிமை, பேச்சுரிமை, வாக்குரிமை என்ற மூன்று உரிமைகளும் மனிதனுக்கு மிக அவசியமான உரிமைகளாகும். அதனாலேயே, இவை அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவுகளான 14, 15, 16, 17, 19, 21, 25, 30, 31 மற்றும் 32 என்பவை அரசமைப்புச் சட்டத்திற்கும் அடிப்படை உரிமைகளுக்கும் அடித்தளமாக விளங்குகின்றன[3].

இந்த மூன்று உரிமைகளும் மனிதனுக்குச் சரிவரக் கிடைக்கவில்லை என்றால் அல்லது அவன் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால் உயிர் வாழத் தகுதி அற்றவனாகக் கருதப்படுவான்.

**எழுத்துரிமை**

எழுத்துரிமை என்பது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும், இது மனித உரிமைகளில் ஒரு முக்கிய அங்கமாகும். இது கருத்துக்களை, எண்ணங்களை, தகவல்களை எழுதவும், வெளியிடவும் மற்றும் விநியோகிக்கவும் ஒருவரை அனுமதிக்கும் ஒரு உரிமையாகும். மனிதன் தன் உணர்வுகளை எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி அப்படியே எழுத்தில் வடிப்பது எழுத்துரிமையாகும்[4].

> **“கத்தி முனையை விட பேனா முனை**
> **வலிமை வாய்ந்தது”**

என்பது அறிஞர் அண்ணாவின் வாக்கு, பாரதி, பாரதிதாசன் போன்ற விடுதலை வீரர்கள் எழுரது மூலமாக இந்தியர்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டினார்கள். அவர்களின் எழுத்துக்களால் அரசியல் விடுதலை மட்டுமல்ல எத்தனையோ சமுதாய மூடப்பழக்க வழக்கங்கள் மண்மூடிப் போய்விட்டன. அவர்கள் இல்லையென்றால் பெண்களாகிய நாம் இன்று சரி நிகராய் அமர்ந்திருக்க முடியாது. ஆனால் அரசியல் தெருச்சரக்காகி விட்ட இந்தக் காலத்தில் எழுதுவதற்கும், பேசுவதற்கும் ஏன் சுவாசிப்பதற்குக் கூட சுதந்திரம் அற்றவர்கள் ஆகிவிட்டோம். இந்தியாவின் நான்காவது தூணாக இருக்கும் பத்திரிகைகளில் பல அரசியல்வாதிகளை விமர்சித்ததால் அழிந்துவிட்டன. சில இன்னும் உயிர் துடித்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு காலத்தில் உலகின் முக்கிய மாற்றங்களில் எல்லாம் பத்திரிகைகள் பெரும் பங்கு வகித்தன. அவற்றின் நிலையே இன்று இப்படி என்றால் தனிமனிதனின் எழுத்துக்கு என்ன மதிப்பு கிடைக்கும். இப்படிப்பட்ட சமுதாயத்தின் நிலையை

> **“கழுத்துக்கு மாலை போதும்**
> **கைதட்டல் போதும், எந்தன்**
> **எழுத்துக்கள் உமக்கு இல்லை**
> **இன்னொரு தலைமுறைக்கு”**[5]

என்ற கவிஞரின் வரிகள் உணர்த்துகின்றன.

**பேச்சுரிமை**

மனித உரிமைகளில் பேச்சுரிமை என்பது, எந்தவொரு நபரும் எந்தவிதத் தடையுமின்றி, தனது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமையைக் குறிக்கும். எந்த ஒரு நபரும் தனது கருத்தை ஒருபோதும் மறைக்கவோ அல்லது அடக்கவோ தேவையில்லை. இது மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். பேச்சுரிமை என்பது மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று.[6] ஒவ்வொரு தனிநபரும் எந்தவித அச்சமும் இன்றி, தனது எண்ணங்களையும், கருத்துக்களையும், தகவல்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் உரிமை பேச்சுரிமை ஆகும். இது

மனிதனின் கண்ணியம், சுயமரியாதையை வெளிப்படுத்துகிறது. பேச்சுரிமை, ஒரு ஜனநாயக சமூகத்தின் இன்றியமையாத அங்கமாகும்.

எழுத்துக்கு எவ்வளவு வலிமை இருக்கின்றதோ அதை விட ஒருபடி மேலான வலிமை பேசுவதற்கு இருக்கின்றது. மனித உரிமைகளில் இவை மிக முக்கியமானதும் கூட. எழுதி, எழுதிச் சாதிக்க முடியாததைக் காந்தியடிகள் பேசிப் பேசிச் சாதித்தார். பேச்சு ஒன்றினால் தான் பாமரனுக்குக் கூட உணர்வை உண்டாக்க முடியும் என்பதை நன்கறிந்தவா் காந்தியடிகள்.

இந்தப் பேச்சுரிமை இன்று செல்வாக்கு உள்ளவர்களுக்கு மட்டுமே உடைமையாகிப் போனது. ஏழைகளுக்கு எட்டாக் கனவாகிப் போனது. ஏழைகள் உணவு, உடை, உறையுள் மட்டுமல்ல உரிமைகளையும் இழந்து நிற்கின்றார்கள். அவர்கள் எழுப்பும் குரல்கள் வாயிலிருந்து வெளியே வரும் முன்பே காற்றோடு கரைந்து போகின்றன. ஒரு சில குரல்கள் வெளியே வந்தாலும் பலம் படைத்தவரின் கையில் சிக்கி இறந்து போகின்றன. இதனை,

**“தேசியத் தேரின்**
**அசோகச் சக்கரத்தின்**
**அடியில்**
**மாண்டு கிடந்தன**
**மனுச் செய்த பசுக்கள்”**[7]

என்று பேச்சுரிமையின் கவலைக்கிடமான நிலையைக் கவிஞர் எடுத்துரைக்கின்றார். மேலும் பேச்சுரிமையைப் பயன்படுத்தாமல் அடங்கி ஒடுங்கி அடிமைகளாய்க் கிடப்பவர்களை,

**“ஏழைப் புறாக்களே**
**உங்கள் இறகுகளை ஒடித்துக்**
**கழுகுகளுக்குக் கூடுகட்டினீர்களே**
**இனியாவதொரு நாள்**
**அக்கினி முட்டைகள் இடுங்களேன்”**[8]

என்று உரிமைகளைத் தூண்டுகின்றனர். அதுமட்டுமல்ல பேச்சுரிமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு கண்டவாறு பேசித் திரிபவர்களை,

**“உங்கள் மேடை!**
**உங்கள் நாக்கு!**
**எது வேண்டுமானாலும் பேசுங்கள்!**
**ஆனால்**
**நாளை**
**காலத்தின் விமர்சனம்**
**உங்கள் பிணங்களைக்கூட**
**தோண்டியெடுத்து வந்து**
**தூக்கில் போடும்”**[9]

என்று கண்டிக்கிறார். இதன் மூலம் பேசி அழிந்தவர்கள், பேசவே முடியாதவர்கள், பேசவே பிறந்தவர்கள் என்ற மூன்று நிலையில் மனிதர்கள் இருப்பதைத் தெளிவுறுத்துகிறார்.

**வாக்குரிமை**

வாக்குரிமை என்பது குடிமக்களின் முக்கிய உரிமைகளில் ஒன்றாகும், இது அவர்களின் குரல் அரசாங்கத்தில் கேட்கப்படுவதை உறுதி செய்கிறது, மேலும் ஜனநாயக சமூகத்தை பலப்படுத்துகிறது. வாக்குரிமை என்பது ஒரு நாட்டின் குடிமக்களுக்கு, சட்டங்கள் மற்றும் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் வாக்களிக்கும் உரிமை ஆகும்[10]. இது ஒரு அடிப்படை மனித உரிமை மற்றும் ஜனநாயகத்தின் ஒரு முக்கிய அம்சம் ஆகும்.

வாக்குரிமை மனிதனுக்கு மிக மிக அவசியமான ஒன்று. ஏனெனில் மனிதனின்

ஒவ்வொரு வாக்கிற்கும் சமுதாயத்தை அசைக்கக் கூடிய வல்லமை உண்டு. ஒரு வாக்கில் வென்றவர்களும் உண்டு, தோற்றவர்களும் உண்டு என்பதை வரலாறு காட்டிக்கொண்டுள்ளது.

வாக்குரிமையின் வலிமையை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும். ஆனால் இன்றைய மனிதர்களுக்கு அதன் வலிமை தெரியாததால் பணத்திற்கு வாக்கை விற்றுத் தவறான தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். அதனால்தான் வாக்கை விற்ற வியாபாரிகளை ஏமாற்றுகின்றனர் அரசியல்வாதிகள். இந்நிலையை,

**"வாக்களித்தவனின்**
**விழாவில் குத்தும்**
**கரும்புள்ளி**
**பின்னால்**
**அவன்**
**முகத்தில் பூசும் கரிக்கு**
**முன்னுரையல்லவா?"[11]**

என்ற கவிஞரின் கவிதை விளக்குகின்றது.

## பொது உரிமைகள்

பொதுவாக இவ்வுரிமைகள் தவிர பெண்ணுரிமை, சுதந்திரம், சமத்துவம், உழைப்புரிமை, உடையுரிமை போன்ற பல்வேறு உரிமைகள் உள்ளன[12].

## பெண்ணுரிமை

பெண்ணுரிமை என்பது பெண்கள் சமூகத்தில், அரசியல் அமைப்பில், பொருளாதாரத்தில், குடும்பத்தில் மற்றும் தனிப்பட்ட வாழ்வில் ஆண்களுடன் சம உரிமை பெற வேண்டிய நிலையை குறிக்கிறது[13]. இன்று பெண்ணியம் பெரிதாகப் பேசப்பட்டாலும் பெண்ணின் அவலங்கள் தீரவில்லை. பெண் அலுவலகத்தில் அதிகாரியாக இருந்தாலும் வீட்டில் சமையல்காரியாகத் தான் இருக்கின்றாள் என்பதை

**"பாவம் மனைவி**
**இந்த**
**இல்லறக் கிரிக்கெட்டில்**
**கட்டிலறைக்கும்**
**சமையலறைக்கும்**
**ரன்கள் எடுத்தெடுத்தே**
**ரணமாய்ப் போனாள்"[14]**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. விதவைப் பெண்கள் மறுமணம் செய்யலாம் என்ற சட்டம் இருந்தாலும் சமுதாயம் அதனை அவ்வளவாக ஏற்றுக் கொள்வதில்லை, அவர்களின் நெற்றியை வெறுமையாகத் தான் பார்க்கிறது. இதனை

**"சமூகம்**
**ஒரு விதவைக் கூந்தலில்**
**பூக்களை மட்டுமே**
**புறக்கணிக்க முடியும்**
**அவள் கண்ணிலிருந்து**
**இதயத்திற்குள் சொட்டும்**
**கண்ணீருக்கு யார்**
**காவல் நிற்க முடியும்"[15]**

என்ற வரிகள் உரிமை இருந்தும் பயன்படுத்த முடியாத பெண்களின் அவல நிலையை உணர்த்துகின்றன.

## சுதந்திரம்

சுதந்திரத்தின் பெருமையை,

**"சுதந்திரம் என்பது**
**அரசியல் சாசனத்தில்**
**அச்சடித்த எழுத்தல்ல**
**அது**
**தேடிக் கிடைக்காத**
**தேவாமிர்தம் அல்ல**
**மானுடக் கடலின்**
**மனிதாமிர்தம்"[16]**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. சுதந்திரம் மனித இனத்தின் உடல் உறுப்பாய் இருந்தும் சூம்பிக் கிடக்கும் அவலத்தை,

**"எம்**
**சுதந்திரச் சீதை**
**மீட்பின் பின்னும்**
**சிறையிருக்கிறாள்"[17]**

என்னும் கவிதை எடுத்துக்காட்டுகின்றது

**சமத்துவம்**

மண்ணில் பிறந்த மனிதர்கள் அனைவரும் ஒன்றே. அனைவரும் சாதி, மதம், மொழி, இன வேறுபாடின்றிச் சமத்துவமாக இருக்க வேண்டும் என்பதை

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"[18]**
**"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"[19]**

என்ற கூற்றுக்கள் விளக்குகின்றன. சமத்துவம் தான் ஒரு நாட்டின் ஆணிவேர், அது அசைந்தால் நாடு அழிந்து விடும் என்கிறார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் நிச்சயமான காரணம் சமத்துவம் தான். மற்ற நாடுகளை விட இந்தியா சமத்துவத்தில் முன்னணி வகிக்கின்றது கார்கில் போரில் நாம் கண்கூடாகக் கண்ட உண்மை இது. இந்தியாவின் இந்த ஒற்றுமை நிலையைச் சுதந்திரமாகச் சித்திரிக்கிறார் கவிஞர், இதனை,

**"சுதந்திரம்**
**சமத்துவத்தேரின் வடம்**
**சமத்துவத் தேரிழுக்கச்**
**சமூகம் தயார்!"[20]**

என்ற இந்தக் கவிதை வரிகள் ஒவ்வொரு இந்தியனின் ஒற்றுமை உணர்வினைப் பிரதிபலிக்கின்றன. ஆனால் நெல்லுக்கிடையில் புல் முளைப்பது போல் சமத்துவ நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் சில பேச்சுப்பெருச்சாளிகளும் இருக்கத்தான் செய்கின்றார்கள். பெரும்பாலும் மேல் தட்டு மக்களிடம் தான் இத்தகைய இழி குணங்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவர்களைப் பற்றிய ஒரு கவிதை,

**"தம்மைப்போல்**
**பகுத்துண்டு வாழும்**
**பண்பிலாமையால்**
**காக்கையும்**
**குருவியும்**
**மனிதனை இப்போது**
**மறுதலிக்கின்றன"[21]**

என்ற வரிகள் ஐந்தறிவு கொண்ட பறவைகள் கூட தங்களிடமிருக்கும் நற்குணங்கள் மனிதர்களிடம் இல்லாததை எண்ணி அவர்களை மறுப்பதாகக் கூறுவது இங்குச் சிந்திக்கத்தக்கது.

**உழைப்புரிமை**

பிறருக்கு ஒளி தந்து தன்னை உருக்கிக் கொள்ளும் மெழுகுவர்த்தி போன்றவன் உழைப்பாளி. இதனை,

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"[22]**
**"உழுவார் உலகத்தார்க்கு ஆணி"[23]**

என்பன போன்ற மந்திர வார்த்தைகள் மக்களை மயக்கினாலும் உழைப்பாளிகளின் நிலை பரிதாபமாகத்தான் இருக்கின்றது. நாள் முழுவதும் உழைத்தும் ஒரு சாண் வயிற்றை நிரப்ப முடியாத நிலை. கால் வயிற்றுக் கஞ்சி கூடக் கூரையை விறகாக்கினால் தான் கிடைக்கிறது. இப்படி அவலப்படும் அவர்களை,

**"தூரத்து வயல்களில்**
**தொலைந்து போன தங்கள் வாழ்வை**
**நிலங்களில் குனிந்து**
**நிமிராமல் தேடும்**
**நிரந்தரக்கூலிகள்"[24]**

என்று கூறுகிறார் கவிஞர். உழைப்பாளிகளின் முன்னேற்ற உழைப்புக்கு உரிமை கொடுக்க

எத்தனையோ காரல் மார்க்ஸ், லெனின், இங்கர்சால்கள் தோன்றினாலும், எத்தனை புரட்சிகள் வெடித்தாலும் நாட்டை ஆண்டவன் ஆண்டு கொண்டே தான் இருக்கின்றான். அடிமைப்பட்டவன் அடிமையாகவே இருக்கின்றான். ஏதுமறியா ஏழைகள் அப்பாவிகளாய் இருக்கும் அவலத்தை,

**“அப்பாவி அவன்**
**ஓட்டுக் கேட்கவொரு**
**கூட்டம்**
**அவன்**
**குடிசை வாசலில்**
**கூடிய போது தான்**
**விடுதலை பெற்றதை**
**விசாரித்தான்”**[25]

என்ற கவிஞரின் கவிதை விளக்குகின்றது.

## உடையுரிமை

உலக நாடுகளில் இந்தியா கலாச்சாரம், பண்பாடுகளில் தலைசிறந்து விளங்குகிறது. அதிலும் தமிழரின் பாரம்பரிய உடையான சேலை, வேட்டி முக்கியத்துவம் பெற்றது. இன்று நாகரீகம் வளர்ந்து அது வளர வளர உடைகளிலும் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஆனால் அதுவே உச்சக்கட்டம் அடைந்து உடைகளில் அலங்கோலத்தின் அரங்கேற்றம் நகரங்களில் நடந்து கொண்டுள்ளது. இதனைக் காந்தியின் அரையாடையோடு ஒப்பிட்டு விளக்குகின்றார் கவிஞர்.

**“அப்படியொன்றும் உன்னை**
**அடியோடு மறக்கவில்லை**
**அண்ணலே!**
**இன்னும்**
**நகரத்துப் பெண்களிடம்**
**உனக்கு**
**நல்ல செல்வாக்கிருக்கிறது**
**உன்னைப் பின்பற்றி**
**அரையாடை கட்டுவது**
**அவர்கள்தாம் இப்போது”**[26]

என்று ஆடை இருந்தும் அரையாடை உடுத்தும் நிலையைப் பதிவு செய்கின்றார்.

## தொகுப்புரை

மனிதர்களுக்கு இயற்கையாகவே சமூகத்திடம் உரிமைகள் இருந்தாலும் அவை வரையறுக்கப்பட்டுச் சட்டமாக வரப் போராடத்தான் வேண்டியிருந்தது. ஒவ்வொரு புரட்சியாக வெடித்த பின்னர்தான் மனிதனுக்கு இன்றுள்ள உரிமைகள் அனைத்தும் கிடைத்தன. மனித உரிமைகளில் இன்றியமையா அங்கங்களாக திகழக் கூடிய எழுத்துரிமையின் அவசியத்தையும் வைரமுத்துவின் கவிதைகளில் காண முடிகின்றது. வாக்குரிமை பெற்ற மக்களுக்கு அதன் வலிமையைத் தன் கவிதைகள் மூலம் புரிய வைக்க முயற்சி செய்வதை இக் கட்டுரை வழி அறிய முடிகின்றது. மேலும், பெண்ணுரிமை குறித்தும் சமத்துவம், சுதந்திரம், உடை போன்ற பொது உரிமைகளுக்காகவும் வைரமுத்து தன் கவிதைகளில் குரல் கொடுப்பதை இங்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது. சமுதாயத்தில் உள்ள மக்களில் மேல் வர்க்கம் அனைத்து உரிமைகளையும் அதிகார பலத்தோடு தன் சுயநலத்திற்காகப் பயன்படுத்துகிறது. இடை வர்க்கம் உரிமைகளைப் போராடியாவது பெறுகிறது. கீழ் வர்க்கம் ஒன்றுமே இல்லாமல் பொதுவுடைமைக்காரர்களின் சிந்தனைகளை எல்லாம் செயலிழக்கச் செய்துவிட்டு அடிமைப்பட்டு கிடக்கின்றது என்பது தான் வைரமுத்து கவிதைகளில் காணப்படும்

உண்மை. உரிமை கிடைத்தவர்கள் கிடைக்காதவர்களுக்கும் உரிமை அளித்தால் நாட்டில் சண்டை மறந்து சமத்துவம் நிலவும். ஒவ்வொரு மனிதனும் சுய உரிமையுடன் செயல்படக் கூடிய நிலை வந்தால் மட்டுமே புத்துலகை உருவாக்க முடியும் என்பது திண்ணம்.

**துணைநூற்பட்டியல்**


1. கிருஷ்ணய்யர் ஆர்.வி (2004). அடிப்படை உரிமைகள்-கலைக் களஞ்சியம், தொகுதி 10, ப.எண்.8.
2. சுவாமிநாதன் ஏ மற்றும் கோமதிநாயகம் பி (2001). அரசியல் கோட்பாடுகள், திருமகள் நிலையம், சென்னை, ப.141.
3. இராஜையா த (2008). மனித உரிமைகள், ஜோன் வெளியீடு, அருப்புக்கோட்டை, ப.எண்.95.
4. சுவாமிநாதன் ஏ (2001). மனித உரிமைகள், விஜயாசபரி பதிப்பகம், சென்னை, ப.எண்.23.
5. காவ்யா சண்முக சுந்தரம், வைரமுத்து இலக்கியத்தடம் (விமர்சனக் கட்டுரைகள்), காவ்யா வெளியீடு, சென்னை-24, ப.எண்.136.
6. இராஜையா த (2008). மனித உரிமைகள், ஜோன் வெளியீடு, அருப்புக்கோட்டை, ப.எண்.106.
7. வைரமுத்து (2003). திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா பதிப்பகம், சென்னை-24, ப.எண்.115.
8. வைரமுத்து (2003). திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா பதிப்பகம், சென்னை-24, ப.எண்.56.
9. வைரமுத்து (2003). திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா பதிப்பகம், சென்னை-24, ப.எண்.16.
10. கிருஷ்ணய்யர் ஆர்.வி (2004). அடிப்படை உரிமைகள்-கலைக் களஞ்சியம், தொகுதி 10, ப.எண்.34.
11. வைரமுத்து (1983). கொடி மரத்தின் வேர்கள், சூர்யா பதிப்பகம், சென்னை-24, ப.எண்.43.
12. கிருஷ்ணய்யர் ஆர்.வி (2004). அடிப்படை உரிமைகள்-கலைக் களஞ்சியம், தொகுதி 10, ப.எண்.36.
13. மேலது, ப.எண். 47.
14. வைரமுத்து (2003). திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா பதிப்பகம், சென்னை-24, ப.எண்.19.
15. மேலது, ப.எண்.62.
16. மேலது, ப.எண்.28.
17. மேலது, ப.எண்.27.
18. திருக்குறள்: 972.
19. திருமூலர், பத்தாம் திருமுறை, பாடல் எண்.3.
20. வைரமுத்து (2003). திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா பதிப்பகம், சென்னை-24, ப.எண்.29.
21. மேலது, ப.எண்.47.
22. திருக்குறள்:1033.
23. திருக்குறள்:1032.

24. வைரமுத்து (2003). திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா பதிப்பகம், சென்னை-24, ப.எண்.39.
25. வைரமுத்து (2018). இன்னொரு தேசிய கீதம், சூர்யா பதிப்பகம், சென்னை-24, ப.எண்.38.
26. வைரமுத்து (2003). திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா பதிப்பகம், சென்னை-24, ப.எண்.81.